## நாட்டை மீட்க நங்கூரமாக இணைந்து நிற்கிறோம்

# பா.ஜ.க. இல்லாத இந்தியாவை உருவாக்குவோம்!

## சென்னை கண்டனக் கூட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

சென்னை, அக். 16 -

**தேனாம்பேட்டையில் உள்ள காமராஜர் அரங்கத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பில், காங்கிரஸ் மாநிலத் தலைவர் கு.செல்வப்பெருந்தகை தலைமையில் நேற்று முன்தினம் (14.10.2024 - திங்கட்கிழமை) நடைபெற்ற ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.வின் வெறுப்பு அரசியலை எதிர்த்து இந்தியா கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்ற மாபெரும் கண்டன கூட்டத்தில் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றுகையில் "பா.ஜ.க. இல்லாத இந்தியாவை வருவாக்குவோம்" என்று குறிப்பிட்டார்.**

கூட்டத்தில் அவர் ஆற்றிய உரை வருமாறு:-

"மழை மிரட்டி கொண்டிருக்கக் கூடிய நேரத்தில் என் பேச்சைத் தொடங்கி இருக்கிறேன். சிலர் கேட்கலாம், எதற்காக தேர்தல் முடிந்து இந்த நேரத்திலே பா.ஜ.க.வை எதிர்த்து இந்தியா கூட்டணி சார்ந்த தலைவர்களை எல்லாம் அழைத்து ஒரு கூட்டத்தை நடத்த வேண்டும் என்று.

ஒன்றே ஒன்றை நாம் நினைவிலே வைத்துக் கொள்ள வேண்டும், பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். ஒவ்வொரு நாளும் வெறுப்பு அரசியலை இந்த மண்ணில் விதைத்துக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கு எதிராக கரம் கோர்த்துக் கொண்டிருக்கக் கூடிய நாம், ஒவ்வொரு நாளும் அந்த விதைகளை வேரறுத்துக் கொண்டே இருந்தோம் என்றால்தான் இந்த நாட்டை காப்பாற்ற முடியும். அந்தப் பணியை தொடர்ந்து தொய்வில்லாமல் நாம் செய்ய வேண்டும்.

இங்கே மேடையில் இருக்க கூடிய அத்தனை இயக்கங்களும் அத்தனை தலைவர்களும் பெரியாரை புரிந்துகொண்டவர்கள், பெரியாரின் மனிதநேயத்தை முன்வைக்கக்கூடிய அரசியலை கையில் எடுத்து இருக்கக்கூடியவர்கள். ஆனால், அவர்கள் அரசியலுக்காக எதை வேண்டுமென்றாலும் கையிலே எடுக்க தயங்காதவர்கள். இன்று அவர்கள் கையிலெடுத்திருப்பது மதவெறுப்பு.

**மனித நேயத்தை புரிந்து கொண்டவர்கள்!**

மத ரீதியான நம்பிக்கை இல்லாதவர்களை விட அவர்களுக்கு அந்த மதத்தின் மீது அக்கறை இருக்கிறதா என்று சிந்தித்துப் பார்த்தால் இல்லை. திராவிட முன்னேற்ற கழகம் எல்லா மதங்களையும் ஒன்றாக பார்க்கக்கூடிய ஒரு இயக்கம், மேடையில் இருக்கக்கூடிய பல தலைவர்களுக்கு மத நம்பிக்கையில்லை. பெரியாரின் வழியிலே வந்தவர்களாக அவருடைய சிந்தனையை புரிந்து கொண்டவர்களாக அவர் சொல்லிய சமூக நீதியை மனதில் தாங்கிக் கொண்டு போராடக்கூடிய தலைவர்களாக தந்தை பெரியாரின் மனிதநேயத்தை புரிந்து கொண்டவர்களாக இந்த மேடையிலே இருக்கக் கூடியவர்கள் இருக்கிறோம்.

ஆனால் பி.ஜே.பி. ஆர்.எஸ்.எஸ். என்பது புரட்டுகளை பொய்யை மட்டுமே முன் வைக்கும் இயக்கம். எதிலும் ஒரு பவர் பாலிடிக்ஸ் அரசியல் ஆதாயங்களை மட்டுமே சுற்றி அவர்களுடைய அரசியல் அமைந்திருக்கிறது.

மாட்டு கறிக்கு எதிராக ஒரு பிரச்சாரத்தை தொடங்கினார்கள். மற்றவர்கள் எல்லாம் அதை பாதுகாக்க தெரியாதவர்கள் போலவும் பா.ஜ.க.வினர் மட்டும்தான் பசுக்களை பாதுகாப்பவர்கள் என்றும் பேசுகிறார்கள். அது சரியா தவறா என்று அடுத்த கட்ட கேள்விகளுக்குள் போக கூடிய நேரம் இது இல்லை என்றாலும் நான் கேட்கிறேன்... நீங்கள் இப்படி வெறுப்பு அரசியலை முன்வைத்து, அந்த மாட்டுக் கறியை மையப்படுத்தி எத்தனை நாடகங்களை நடத்தியிருப்பீர்கள்? கும்பல் வன்முறை என ஒரு கூட்டமாக சேர்ந்து கொண்டு எத்தனை உயிர்களை பலி வாங்கியிருக்கிறீர்கள்?

ஆனால் உண்மையிலேயே அது தவறு என்று நினைக்கக் கூடியவர்களாக நீங்கள் இருந்தால்.. இன்றைக்கு இந்தியாவில் அதிகமாக எந்த மாநிலத்தில் இருந்து மாட்டுக் கறி ஏற்றுமதி அதிகமாக நடக்கிறது? தமிழ்நாட்டில் இருந்தா இல்லை... கேரளாவில் இருந்தா இல்லையே... குஜராத்தில் இருந்தும், உத்திரபிரதேசத்தில் இருந்தும்தான் அதிக மாட்டுக் கறி ஏற்றுமதி செய்து அனுப்பப்படுகிறது. அப்படியென்றால் யாரை சுற்றி வளைக்க வேண்டும்? யாரை நடுவில் நிறுத்தி அனைவரும் கேள்வி கேட்க வேண்டும்.

இஸ்லாமிய சகோதரர்களை இல்லை... மாட்டுக் கறி சாப்பிடுவேன் என்று சொல்லக்கூடிய யாரையும் கேட்கக் கூடிய தகுதி உங்களுக்கு இல்லை. ஏனென்றால் அதில் உங்களுக்கு முதல்ல நம்பிக்கை கிடையாது.

**அரசியல் என்றால், பிளவு படுத்துவதா?**

ஏற்றுமதி என்றால் மாடுகளை அப்படியே அனுப்புகிறார்களா? அதை வெட்டி மாமிசமாகத்தான் அனுப்புகிறார்கள். லாபம் என்று வரும்போது, பயன்படும் என்று வரும்போது அக்கறை எல்லாம் உங்களுக்கு காணாமல் போய்விடுகிறது. ஆனால் அரசியல் என்று வரும்போது மட்டும்தான், நீங்கள் மனிதர்களை பிளவுபடுத்துகிறீர்கள். இதற்கு எத்தனையோ உதாரணங்களை சொல்லலாம்.

ஒவ்வொரு முறையும் நீங்கள் எதை அரசியலாக்கிக் கொண்டிருக்கிறீர்களோ, அதன் மீது உங்களுக்கு அக்கறையே இல்லை. நாங்கள் தான் இந்துத்வவாதிகள் இந்து மதத்தை நாங்கள்தான் காப்பாற்றுகிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் பெரும்பான்மையாக இருக்கக் கூடிய இந்து மக்களுக்கு என்ன செய்திருக்கிறீர்கள்? வேலை வாய்ப்பை உருவாக்கித் தருகிறீர்களா? பெரும்பான்மையாக இருக்கும் இந்துக்களுக்கு, அதில் சரிபாதியாக இருக்கும் பெண்களுக்கு இந்த நாட்டில் பாதுகாப்பு இருக்கிறதா?

பெண்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்று காங்கிரசும் இங்கே இருக்கும் அத்தனை கட்சிகளும் போராடிய பிறகு ஒரு மசோதாவை கொண்டுவருகிறீர்கள். அதை நிறைவேற்றுகிறீர்கள். ஆனால் ,அதனால் இட ஒதுக்கீடு கிடைத்துவிட்டதா? பெரும்பான்மையான இந்து பெண்களையும் சேர்த்து நீங்கள் ஏமாற்றியிருக்கிறீர்கள்.

இப்படி பெரும்பான்மை இந்துக்கள் இருக்கும் நாட்டில் கொரோனாவால் பாதிக்கப்பட்டபோது... மக்களை பாதுகாப்பதற்காக தமிழ்நாட்டில் திராவிட ஆட்சி போராடிக் கொண்டி ருந்தோம். அண்ணன் முதல்வர் தளபதி மக்களைக் காப்பாற்றும் கடமைகளை செய்துகொண்டிருந்தார்.



நீங்கள் என்ன சொன்னீர்கள்? தட்டு எடுத்து தட்டுங்கள் கொரோனா ஓடிப் போய்விடும். இது தான் பெரும்பான்மை மக்களை காப்பாற்றுகிற லட்சணமா? இப்படி இந்த நாட்டிலே பெரும்பான்மையாக இருக்கும் இந்துக்களை ஏமாற்றுவதற்காக நீங்கள் கையிலே எடுத்திருக்கும் ஆயுதம் தான் மதம்,

தொடர்ந்து எல்லா இடங்களிலும் தன்னுடைய கருத்தியலை சொல்லக் கூடியவர்கள். அதன் மேல் நம்பிக்கை இருப்பவர்களை கொண்டுவந்து நிரப்பக் கூடியவர்கள். ஆர்,எஸ்.எஸ்,க்கும் மகாத்மா காந்தி கொலைக்கும் சம்பந்தம் இருக்கிறது என்று இங்கே பேசியவர்கள் சொன்னார்கள்.

பா.ஜ.க. ஆட்சியில் இருக்கும் மாநில பாடத்திட்டங்களில் மகாத்மா காந்தி ஆக்சிடென்ட்டில் இறந்துவிட்டார் என்று சொல்லித் தருகிறார்கள். இவர்கள் புதிய கல்விக் கொள்கையை கொண்டு வந்து, தமிழ்நாட்டுக்கு சொல்லித் தருகிறோம் என்று வருகிறார்கள். அதை சொல்லிக் கொடுத்தால்தான் நிதி தருவோம் என்று சொல்கிறார்கள்.

**வழிகாட்டும் மாநிலம் தமிழ்நாடு தான்!**

உங்க ஊர்ல எத்தனை பேர் படிக்கிறார்கள்? உங்க ஊர்ல எத்தனை பேர் உயர் கல்விக்குப் போகிறார்கள்? உங்களுக்கெல்லாம் வழிகாட்டக் கூடிய மாநிலம் தமிழ்நாடு. எங்களிடம் வந்து கற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் இன்னும் முப்பது வருடம் கழித்து எந்த இடத்தில் நிற்க வேண்டும் என்று நினைக்கிறீர்களோ, அந்த இடத்தை எப்போதோ கடந்து சென்று கொண்டிருக்க கூடிய மாநிலம் தமிழ்நாடு.

இந்தத் தலைமுறை தாண்டி அடுத்த தலைமுறை தாண்டியும் பிள்ளைகள் ஒருவரை ஒருவர் வெறுத்துக் கொண்டிருந்தால் இந்த நாடு என்பது நாடாக இருக்குமா? அதுபற்றிய கவலைகள் அவர்களுக்கு இல்லை. அதனால்தான் எல்லாவற்றிலும் பிரிவினை அரசியல் ஆதாயம் தேடுகிறார்கள்.

ஆனால் மேடையில் இருக்கக் கூடிய எங்கள் தலைவர்களுக்கு, எங்கள் தலைவர் முதல்வர் தளபதி ஆகியோருக்கு மக்கள் மீதான அக்கறை இருப்பதால்தான் அவர்களைத் தொடர்ந்து எதிர்த்து வருகிறோம்.

அரசியலுக்காக இவர்கள் விதைக்கும் வெறுப்பை எதிர்த்து திரு ராகுல் காந்தி அவர்கள் ஒரு அரசியலை உருவாக்குகிறார். அது என்னவென்றால், அதுதான் அன்பின் அரசியல்.

ஒருவன் நம்மைப் பார்த்து ஆயுதத்தை எடுத்து தாக்கினால், கொச்சையான வார்த்தைகளால் திட்டினால், அவனைப் பார்த்து, 'நான் உன்னையும் நேசிக்கிறேன். உனக்காகவும் தான் போராடுகிறேன்' என்று ராகுல் காந்தி சொல்கிறார். பதிலுக்கு என்ன சொல்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

முடிந்தவரை அவரை நாடாளுமன்றத்தில் இருந்து வெளியே அனுப்பப் பார்த்தார்கள். ஆனால் நீதிமன்றத்தில் நீதி இன்னும் மிச்சம் இருப்பதால் மீண்டும் நாடாளுமன்றம் வந்தார். இந்த முறை நாடாளுமன்றத்துக்கு எதிர்க்கட்சித் தலைவராக வந்திருக்கிறார்.

**ராகுல் காந்தி மீது வெறுப்பு ஏன்?**

ராகுல் காந்தி அன்பை முன் வைத்து நடத்தும் அரசியலுக்கு அவர்களிடம் பதில் இல்லை. அதனால்தான் ராகுல் காந்தி மீது அவர்களுக்கு இத்தனை வெறுப்பு.

இங்கே மேடையில் குறிப்பிட்டுச் சொன்னார்கள், ராகுல் காந்தி கோவைக்கு தேர்தல் பிரச்சாரத்துக்காக வந்தபோது வண்டியை நிறுத்திவிட்டு ஓடிச் சென்று சாலையை கடந்து முதல்வர் அண்ணன் தளபதிக்காக இனிப்பு வாங்கினார். 'நான் அண்ணன் என்று அழைக்கும் ஒரே அரசியல்வாதி' என்று சொல்லி வாஞ்சையோடு அந்த இனிப்பை மேடையில் அவருக்குத் தந்தார்.

அந்த அன்பு அதோடு நின்றுவிடவில்லை... 40க்கு 40 வெற்றி பெற்ற பிறகு அண்ணன் தளபதி கோவையிலே நன்றி சொல்லச் செல்கிறார். அப்போது, ' மோடியின் வெறுப்பு அரசியலுக்கு அன்பை முன் வைத்து ஒரே ஒரு இனிப்பு பொட்டலத்தால் அத்தனை பேரையும் அடித்து நொறுக்கியவர் ராகுல் காந்தி. அவருக்கு நன்றியை சொல்கிறேன்' என்று பேசினார். இதுதான் அன்பின் அரசியல்.

நாம் எதை செய்தாலும் மிரள்கிறார்கள். இந்தியா கூட்டணி என்று நாம் பெயர் வைத்த பிறகு இந்தியா என்ற பெயரையே சொல்லாமல் தவிர்க்கிறார்கள். வெளிநாடுகளுக்கு போய் பாரத் பாரத் என்று சொல்கிறார்கள். அவர்கள் எந்த ஊரை பற்றி சொல்கிறார்கள் என்று புரியாமல் இருக்கிறார்கள். நமக்குத் தெரியும்...

நம்மைப் பார்த்து அந்த அளவுக்கு மிரண்டு போயிருப்பவர்களை, நாம் அவர்களையும் வாஞ்சையோடு அரவணைத்து அன்பின் அரசியலை உருவாக்குவோம் என்று சொல்லும் ராகுல் காந்தியை பார்த்தும் மிரண்டு போயிருக்கிறார்கள்.

நாடாளுமன்றத்தில் ராகுல் காந்தி சாதி வாரி கணக்கெடுப்பு பற்றி பேசிக் கொண்டிருந்தார். நானும் நாடாளுமன்றத்தில் இருந்தேன். சாதி வாரிக் கணக்கெடுப்பு அவசியம் நடத்தப்பட வேண்டும் என்று நிலைப்பாடு எடுத்து ராகுல் காந்தி அழுத்தமாக பேசிக் கொண்டிருந்தார். அப்போது எதிரணியில் இருக்கக் கூடிய முன்னாள் அமைச்சர் அனுராக் தாக்கூர் எழுந்து, 'நீ சாதியற்றவன்' என்கிறார். எனக்கு இந்தியும் புரியவில்லை, அதன் பின் அது ஒரு திட்டு என்றும் புரிய வில்லை.

**பெயருக்குப் பின் சாதி இல்லை!**

ஏனென்றால் நமக்குத் தெரிந்ததெல்லாம் சாதி என்பது மனிதனை சாக்கடையாக்கும் என்று சொல்லிச் சொல்லி வளர்த்த பெரியாரின் வழி தான். அதனால் அது இன்சல்ட் என்றே எனக்கு புரியவில்லை,.

அனுராக் தாக்கூரை பொறுத்தவரை சாதி என்பது தெரியாமல் இருந்தால் அது இழிவான நிலை. ஏனென்றால் பெயருக்குப் பின்னால் சாதி போட்டுக் கொள்ளக் கூடியவர்கள் அவர்கள். நாம் யாருக்கும் பெயருக்கு பின்னால் சாதி இல்லை.

அப்போது ராகுல் காந்தி எழுந்து பதில் சொல்கிறார்... 'ஆமாம்... எனக்கு சாதி இல்லை.'. அது தான் நாம் அத்தனை பேரையும் பிணைத்து வைத்திருக்கக் கூடிய கயிறு.

ராகுல் காந்தி நாடாளுமன்றத்தில் பேசும்போது, 'தமிழ்நாட்டில் வந்து நீங்கள் ஒரு சீட்டாவது ஜெயித்துவிட முடியுமா?' என்று கேட்டார். அந்தத் தமிழர்கள் மீது உங்கள் மொழியை திணித்துவிட முடியுமா? என்று கேட்டார்.

ராகுலின் இந்த பேச்சைப் பார்த்து, நாடாளுமன்றத்தில் காங்கிரஸின் பிரதிநிதியாக இருக்கும் ஒருவர் பேசும் பேச்சா அல்லது பெரியாரின் வழி வந்தவர் பேசும் பேச்சா என்று நான் நினைத்துக் கொண்டேன்.

ஏனென்றால் இந்த நாடு முழுவதும் இப்போது சமூக நீதியின் அவசியத்தை உணர்ந்திருக்கிறது. எம்பிக்கள் பதவியேற்றுக் கொள்ளும்போது கையில் அரசியல் அமைப்பு சாசன புத்தகத்தை எடுத்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஒரு அரசிடம் இருந்து அரசியல் அமைப்பு சட்டத்தை பாதுகாக்க வேண்டிய கடப்பாடு நமக்கு இருக்கிறது என்று எதிர்க்கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் அவலமான நிலையை இன்று நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

மிரட்டி, தலையை வாங்கிவிடுவோம், நாக்கை வெட்டிவிடுவோம் என்றே அரசியல் செய்யலாம் என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறாரக்ள்.

**பயமே இல்லாதவர் ராகுல் காந்தி!**

நான் ஹரியானாவில் ராகுல் காந்தியோடு பாரத் ஜோடோ யாத்திரையில் நடந்திருக்கிறேன். ஒரு மனிதனுக்கு பயம் என்பதே இல்லை என்றால் அது ராகுல் காந்தி என்று நினைக்கிறேன். ஏனென்றால் ராகுல் காந்தியை ராகுல் காந்தியாக மட்டும் நாம் பார்க்க முடியாது. ஏனென்றால் அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இந்த நாட்டுக்காக எப்படியெல்லாம் உயிரை தியாகம் செய்திருக்கிறார்கள் என்பதோடு சேர்த்துதான் நாம் ராகுல் காந்தியை பார்க்க வேண்டும்.

அப்படிப்பட்ட சரித்திரத்தோடு வந்திருக்கக் கூடிய மனிதர், அங்கே பாதுகாப்பாக இருக்கும் படையினரை பதற வைத்துவிட்டு, அங்கே ஒருவர் கையசைத்தால் ஓடிச் சென்று கை கொடுப்பார்... ஒரு குழந்தையை பார்த்தால் அருகே சென்று நலம் விசாரிப்பார். ஒரு பெண் கண்ணீரோடு நின்றுகொண்டிருந்தார். ஓடிச் சென்று அந்த பெண்ணை அரவணைத்து, அவரது கண்ணீருக்கான காரணம் என்ன என்று கதையைக் கேட்பார்.

கூப்பிய கரங்களுக்குள் கத்தி இருக்கிறதா என்று யாருக்கும் தெரியாது. அதைப் பற்றிய சிந்தனை இல்லாமல் மனிதர்களை நேசிக்கத் தெரிந்த ஒரு தலைவர்தான் ராகுல் காந்தி.

அதனால் இந்த மிரட்டல், உருட்டல் எல்லாம் காங்கிரசிடமும் சரி, ராகுல் காந்தியிடமும் சரி, தலைவர் கலைஞர் அவர்களின் வழி வந்த எங்கள் தலைவர் அண்ணன் தளபதியிடமும் சரி... திமுகவிடமும் சரி... இங்கே இருக்கும் அத்தனை தலைவர்களிடமும் சரி...நிச்சயமாக எந்த வேலைக்கும் ஆகாது.

எல்லாவற்றையும் கடந்து வந்தவர்கள் நாங்கள்.. எத்தனையோ சவால்களை, சோதனைகளை, வலிகளை, அடிகளைத் தாங்கி... இந்த நாட்டின் நங்கூரமாக நிற்கவேண்டும் என்ற ஒரே எண்ணத்தோடு, நாட்டை உங்களிடம் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே எண்ணத்தோடு இந்த மேடையில் கரம் கோர்த்திருக்கக் கூடிய தலைவர்கள்தான் நாங்கள்.

**தமிழ்நாட்டில் பா.ஜ.க.வுக்கு வேலை இல்லை!**

அதனால் நான் பா.ஜ.க.வுக்கு குறிப்பாக தமிழ்நாடு பாஜகவுக்கு ஒன்றை தெளிவாக சொல்லுகிறேன்.. 'இங்க உங்களுக்கு வேலை இல்லை. கடந்த தேர்தல்ல தெளிவா சொல்லி விட்டோம். அதனால வேற மாநிலத்துல போய் முயற்சி பண்ணுங்க. ஏன்னா கொஞ்சம் கொஞ்சமாய் அதுவும் சுருங்கிக் கொண்டுவந்து உங்க கனவை நாங்கள் உருவாக்கிக் காட்டுவோம். நீங்க சொல்லுவீர்கள் அல்லவா...காங்கிரஸ் முக்த் பாரத் என்று... நாங்கள் விரைவில் ஆர்.எஸ்.எஸ்.பாஜக முக்த் பாரத்தை இந்தியாவை உருவாக்கிக் காட்டுவோம்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.

திராவிடர் கழகத் தலைவர் வீரமணி, மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, வி.சி.க. தலைவர் தொல் திருமாவளவன், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் கே.எஸ்.அழகிரி, திரு.பீட்டர் அல்போன்ஸ், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் காதர் மொகிதீன், மனித நேய மக்கள் கட்சி ஜவாகிருல்லா, தமிழக வாழ்வுரிமைக் கட்சி வேணுகோபால் கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சி ஈ.ஆர்.ஈஸ்வரன் மற்றும் பலர் இதில் கலந்து கொண்டனர்!

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**நாச்சியார்கோவில் ஆர்.பாண்டுரெங்கன்**
**அக்டோபர் 16 (2011)**



**தஞ்சை மாவட்டத்தில் கழகம் துவங்கியபோது கும்பகோணம் பகுதியில் நூற்றுக்கணக்கான இளைஞர்களை இயக்கத்தில் சேர்த்த பெருமைக்குரியவர்.**

**கே.கே.நீலமேகம், மன்னை நாராயணசாமி, கோ.சி.மணி, குடந்தை பத்மநாபன் ஆகியோருடன் இணைந்து கழகப் பணியாற்றியவர்.**

**குடந்தை, நாச்சியார்கோவில் பகுதிகளில் பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரை அழைத்து பல பொதுக்கூட்டங்களை நடத்தியவர்.**

**கழகம் நடத்திய அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

### 'தினபூமி' நாளிதழின் உரிமையாளர்

## மணிமாறன் - சாலை விபத்தில் மரணம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 16–

'தினபூமி' நாளிதழின் உரிமையாளர் மணிமாறன் அவர்கள் சாலை விபத்தில் உயிரிழந்ததை அடுத்து, அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தி வெளியிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

**தூத்துக்குடி மாவட்டம் கோவில் பட்டி அருகே நிகழ்ந்த சாலை விபத்தில் தினபூமி நாளிதழின் உரிமையாளர் மணிமாறன் அவர்கள் உயிரிழந்தார் என்ற செய்தியறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.**

**அவரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், தினபூமி பணியாளர்கள், பத்திரிகைத் துறையைச் சேர்ந்த தோழர்கள் என அனைவருக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு அவர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---



திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியம், வெலக்கல்நத்தம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பழுதடைந்த வகுப்பறை கட்டிடத்தை மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் மேற்கு ஒன்றிய செயலாளர் கே.சதிஷ்குமார், கிழக்கு ஒன்றிய செயலாளர் க.உமாகன்ரங்கம், ஒன்றியக்குழு தலைவர் சத்யாசதீஷ்குமார், மாவட்ட கவுன்சிலர் ஜெயாசுந்தரேசன், ஊராட்சிமன்றத் தலைவர் ராமன் மற்றும் பலர் பங்கேற்றனர்.